10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 319 ஞாயிற்றுக்கிழமை 08 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18

## பிரதி சபாநாயகர் பதவி விலகுகிறார்

கொழும்பு, ஏப்.08

பிரதி சபாநாயகர் திலங்க சுமதி பால பதவியை ராஜினாமா செய்வதாக தனக்கு அறிவித்துள்ளதாக சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், பிரதி சபாநாயகர் பதவியில் இருந்து விலகுவதாக திலங்க சுமதிபால கூறியதாக சபாநாய கர் நாடாளுமன்றத்தில் அறி 06▶

## தமிழ்ப் பெண்களுக்கு கட்டாயக் கருத்தடை

'திருக்' தகவல்

கொழும்பு,ஏப்.08

இலங்கைத் தமிழ்ப் பெண்களுக்கு வலுக்கட்டாயமாக் கருத்தடை ஊசி போடப்படுவதாக தகவல்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத் தியுள்ளன.

இது தொடர்பான செய்தியை பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'தி கார்டியன்' எனும் பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு அதிலும் 06▶

## "ரணிலே தலைவர்!"

### ஐ.தே.க. முடிவு



கொழும்பு, ஏப்.08

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் ஏற்படுத்த அவசியம் இல்லை எனவும், தொடர்ந்தும் ரணில் விக்கிரமசிங்கவே கட்சித் தலைவராகச் செயற்படுவார் என்றும் ஐ.தே.க செயற்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி தெரி வித்துள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற கட்சியின் 06▶

## கரைச்சியில் யார் ஆட்சி?

### குழப்பநிலை நீடிப்பு

கிளிநொச்சி, ஏப்.08

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபை யின் ஆட்சியைக் கைப்பற்றுவதில் கட்சி களிடையே குழப்ப நிலை தோன்றியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் கரைச்சிப் பிரதேச சபையில் அதிக ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கொண் டுள்ளது. மொத்தம் 35 உறுப்பினர்களைக் கொண்டிக்கும் கரைச்சிப் பிரதேச சபை யில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 17 ஆசனங்கள் கிடைத்தன.

அதேவேளை, எதிர்த்தரப்பிலுள்ள 18 உறுப்பினர்களில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரால் களமிறக்கப் பட்ட சுயேச்சைக் குழுவினர் 11 ஆசனங்க ளையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரண்டு ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி இரண்டு ஆசனங்களையும் ஐ. தே.க, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகி யன தலா ஒவ்வொரு ஆசனங் களையும் கைப்பற்றியிருந்தன. 06▶

## ரணிலோடு ஒப்பந்தமில்லை

### மறுக்கும் கூட்டமைப்பு



யாழ்ப்பாணம், ஏப்ரல் 08

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவித ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடவில்லை என கூட்டமைப்பின் பேச் சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். பிரதான வீதியிலுள்ள அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந் திப்பின் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

"அண்மைய 06▶

## கூட்டாட்சியைக் கண்டுபிடித்தால் பரிசு!

யாழ்ப்பாணம், ஏப்.08

"உள்ளூராட்சி சபைகளில் ஆட்சிய மைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஈ.பி.டி.பியோடோ அல்லது வேறெந்தக் கட்சியுடனோ ஒப்பந்தங்க ளையும் செய்யவில்லை யாருடனும் சேர்ந்து கூட்டாட்சியும் அமைக்கவில்லை. அவ்வாறு நாங்கள் கூட்டிணைவு அல் லது கூட்டாட்சி என்று ஊடகங்கள் கூறுவது அர்த்தமற்றது. அப்படி நாங் கள் எந்தக் கட்சியோடாவது இணைந்து கூட்டாட்சி அமைத்ததைக் கண்டு பிடித் துத் தருபவர்களுக்கு பரிசு வழங்கப் படும்" என்று கூட்டமைப்பின் பேச்சாள ரும் நர்டாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

"உள்ளூராட்சி மன்றங்களில் நிர்வாகங் களை அமைக்கும் செயற்பாடுகள் தொடங் கிய முதல் நாளே ஆட்சியமைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் 06▶

## முல்லைத்தீவில் தொடரும் நில ஆக்கிரமிப்பை தடுப்பார் மைத்திரி

### சுமந்திரன் தகவல்

முல்லைத்தீவு, ஏப்.08

"முல்லைத்தீவு மாவட்டத்தில் மகாவலி அதிகார சபை யினூடாக மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்பு மற்றும் சிங்களக் குடியேற் றங்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வுடன் பேசியுள்ளது. அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்" எனக் கூட்ட மைப்பின்பேச்சாளர்எம் ஏ.சுமந்திரன் 06▶

## 650 அல்ல 500 தான்!

யாழ்ப்பாணம், ஏப்.08

வலி.வடக்கில் இராணுவத்தின் பிடி யில் இருந்து அடுத்தவாரம் விடுவிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்ட 650 ஏக்கர் காணியில், 500 ஏக்கரே 16 ஆம் திகதி விடுவிக்கப்படும் என்று மீள்குடியேற்ற அமைச் சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

"அத்துடன், எதிர்வரும் 16ஆம் திகதி தொடக்கம், பொன்னாலை- பருத்தித்துறை வீதி வழியாக பொதுமக்கள் பகலில் சுதந் திரமாகச் சென்று வருவதற்கும் அனு மதிக்கப்படும்.

ஏற்கனவே பொதுமக்களின் பயணத் துக்காக இந்த வீதி திறந்து விடப்பட்ட போதும், இ.போ.ச பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபட்டன. அவை கூட இரா ணுவப் பாதுகாப்புடன் மாத்திரம் செல்வ தற்கு அனுமதிக்கப்பட்டது.

தற்போது இந்த வீதியை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 ம்ணி வரை பொதுமக்கள் பயன்படுத்த அனுமதி அளிக்கப்படவுள்ளது" என்றும் 06▶

## ஜேர்மனியில் நேற்று வாகனத் தாக்குதல்

பலர் பலி!



பெர்லின், ஏப்.08

ஜேர்மனியின் மொன்ஸ்ரர் பகுதியில் பாதசாரிகள் மீது வாகனம் ஒன்று மோதி யதில் பலர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படு கின்றது. ஜேர்மன் நேரப்படி நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் 06▶

## போர் வெற்றி இனியில்லை!

கொழும்பு, ஏப்.08

இனிமேல் இலங்கையில் போர் வெற்றிக் கொண் டாட்டங்கள் நடத்தப்படாது என இலங்கை அர சாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு உறுதி வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் நடத் தப்படும் இராணுவ அணி வகுப்புகளோ, 06▶

# ஐ.நா. உடன்பாட்டை மீறியது இராணுவம்!

## மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 07

ஐ.நா. அமைதிப் படைக்கான அணிகளை அனுப்புவது தொடர்பான உடன்பாட்டை இராணுவம் மீறியுள்ளது என்று இலங்கைக்கான மனித உரிமைகள் ஆணைக்குழு குற்றம் சாட்டி உள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல், லெபனானுக்கு இராணுவத்தினரை அனுப்பியதன் மூலமே இந்த மீறல் இடம்பெற்றுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஐ.நா. அமைதிப்படைக்கு தெரிவு செய்யப்படும் படையினருக்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பெற்ற மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உட்கம, இதுதொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அதில், "கடந்த 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடப்பட்ட கடிதம் ஒன்றுடன், 204 இராணுவத்தினரின் விண்ணப்பங்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு கிடைத்திருந்தது.எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதிக்கான செயல்முறைகள் முடிய முன்னரே, 49 இராணுவத்தினர் லெபனானுக்கு அனுப்பப்பட்டு விட்டனர் எனத் தகவல்கள் வெளியாகின. இதுபற்றி இராணுவத்திடம் விசாரித்த போது, லெபனானுக்கு ஒரு தொகுதி படையினர் அனுப்பப்பட்டு விட்டமை உறுதியானது. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல், ஐ.நா. அமைதிப் படைக்கு எந்தவொரு படையினரையும் அனுப்ப முடியாது என்று தெரிந்திருந்தும், இராணுவம் ஒரு தொகுதி படையினரை அனுப்பியதை அறிந்து நாம் ஆச்சரியமடைந்தோம். லெபனானுக்கு அவசரமாக 49 படையினரை அனுப்ப வேண்டிய தேவை உள்ளதாக எமக்கு தெரிவிக்கப்படவில்லை. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறாமல், ஐ.நா. அமைதிப் படைக்கு அணியொன்றை அனுப்பியதன் மூலம், மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனான உடன்பாட்டை இராணுவம் மீறியுள்ளது. ஐ.நா. அமைதிப்படைக்கு ஆட்களை அனுப்பும் நிறுவனங்களான, முப்படைகள், பொலிஸ் என்பன, மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் ஒத்துழைக்க வேண்டியது முக்கியமானது" என்றும் அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஆ)

## தந்தையும் மகனும் விபத்தில் சாவு

அகலவத்தை,ஏப். 08

அகலவத்தை கலவெல்லாவ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

92 வயதான தந்தையும், 51 வயதான மகனுமே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இவர்கள் பயணித்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து , அருகில் இருந்த பாலமொன்றில் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ஆ)

# முல்லைத்தீவில் புலிகளின் காவலரண்

முல்லைத்தீவு, ஏப். 08

இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் சிறப்புத் தளபதி ஒருவரால் தாக்குதல் கட்டளை வழங்கப்பட்ட நிலத்தடிக் காவலரண் ஒன்று முல்லைத்தீவு பெருங்காட்டுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கட்டளைத் தளபதி ஒருவரே இந்தக் காவலரணில் இருந்து கட்டளைகளை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேப்பாபிலவு - புதுகுடியிருப்பு பிரதான வீதியில் இருந்து தெற்குப் பக்கமாக உள்ள பெருங்காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றவர்களினாலேயே இந்தக் காவலரண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கேப்பாபிலவில் இருந்து புதுகுடியிருப்பு நோக்கிப் படை நெடுத்த இராணுவத்தினரின் நகர்வை எதிர்த்து விடுதலைப் புலிகளின் மூன்று சிறப்புப் படையணிகள் அந்தப் பகுதியில் எதிர்ப்புத் தாக்குதல்களை தொடுத்திருந்தனர். கிழக்குப் பக்கமாக சோதியா படையணியும், பிரதான வீதி களமுனையில் ராதா படையணி மற்றும் லெப். கேணல் விக்ரர் கவச எதிர்ப்புப் படையணியும், தெற்குப் பக்கமாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியும் இணைந்து இராணுவ நகர்வை எதிர்த்துத் தாக்குதல் தொடுத்திருந்தனர். இவ்வாறு ஒருங்கிணைந்த படையணிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கு முப்படையினரும் இணைந்து ஒரு மாதத்துக்கும் மேலாக அந்தப்பகுதியில் பல்வேறு தாக்குதல்களை தொடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது .

இவ்வாறான சந்தர்ப்பத்தில் குறித்த காவலரணை மீட்பதற்காக முப்படையினரும் இணைந்து இறுதி நேரத்தில் சுமார் 6 மணித்தியாலங்கள் அந்தப் பகுதியில் யுத்தம் ஒன்றைத் தொடுத்திருந்தனர். இந்த இறுதிச் நேரச் சமரின் போது ஒரு மணித்தியாலத்துக்கு சராசரி 12 விடுதலைப் போராளிகள் அந்தப்பகுதியில் மரணித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவு முன்னாள் போராளி ஒருவர் தெரிவித்துள்ளார்.(ஆ)




## புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்தும் ரணில்!

கொழும்பு, ஏப்.08

புலம்பெயர் தமிழர்களை திருப்திப்படுத்துவதற்காகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து நிபந்தனைகளுக்கு இணங்கினார் என முன்னாள் கடற்படை அதிகாரி சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

"இலங்கையைச் சமஷ்டி நாடாக மாற்றும் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையைத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விதித்துள்ளது. பிரதமரின் தந்திரோபாயங்கள் நாட்டை பிளவுபடுத்தி விடும். அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தந்திரோபாயங்களுக்கு இணங்குவதன் மூலம், நாட்டுக்குத் துரோகமிழைக்கின்றார். பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களித்ததன் மூலம் பிரதமருக்கும் அவர்களுக்கும் இடையிலான நட்பின் வலிமை வெளிப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எதிர்க்கட்சி எனத் தெரிவிப்பது வெட்கக்கேடான விடயம் ." எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஆ)

# கட்சித் தீர்மானமே காரணமாம்!



கொழும்பு, ஏப். 08

சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்துக்கு அமையவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் தான் பங்கேற்கவில்லை என்று புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ. எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"பிரதமருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் சுதந்திரக் கட்சி விரிவாக ஆராய்ந்தது. நல்லாட்சி அரசாங்கத்தின் பங்காளியான சுதந்திரக் கட்சி நாட்டின் பொருளாதார, அரசியல் ரீதியான பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்று தீர்மானித்தது. கட்சியின் தீர்மானத்துக்கு அமையவே, நாங்கள் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. பொருளாதார, அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் நாட்டை ஸ்திரமற்ற நிலைக்கு தள்ளுவதற்கு நாங்கள் இடமளிக்கமாட்டோம். இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே இருந்தோம். அந்த வகையிலேயே நாங்கள் வாக்கெடுப்பிலும் பங்கேற்கவில்லை." என்று அவர் தெரிவித்தார். (ஆ)

## ஜப்பானில் தொழில்

கொழும்பு, ஏப். 08

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் ஐ.எம். ஜப்பான் நிறுவனம் ஆகியன புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டதற்கமைவாக, ஜப்பானில் தொழில் நுட்பப் பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான் மொழித் தேர்ச்சியில் ஜே.எல்.பி.ரி.4 அல்லது என்.ஏ.ரி.4 என்ற தரத்துடனான கல்விச் சான்றிதழைக் கொண்ட இளைஞர்களுக்கு இந்தப் பணியாளர் சேவைக்கான தொழில் வாய்ப்புக்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் உட்பட்ட உயர் தரம் வரையில் கல்வி கற்றவர்கள் இதற்காக தமது தகவல்களை வெளிநாட்டுப் பணியகத்துக்கு சமர்ப்பிக்க முடியும். இந்த விண்ணப்பங்களை பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். விதியோகம் மற்றும் ஆட்சேர்ப்பு (பொதுவான பிரிவு), இலங்கை வேலைவாய்ப்புப்பணியகம், இலக்கம், 234, டென்ஸில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த பத்தரமுல்ல என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 279 18 14 அல்லது 011 438 82 95 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொண்டு பெற்றுகொள்ள முடியும். (ஆ)

## கண்டி சம்பவங்களுக்கு விரைவில் நடவடிக்கை!

கொழும்பு, ஏப்.08

கண்டிப் பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடைய விசாரணை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சகவாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான ஆலோசகர் கீதா சகவாரோடு இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"புத்தாண்டின் பின்னர் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளன, இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய தீவிரவாதிகளுக்கு எதிராகப் பாரபட்சமின்றி தண்டனை வழங்கப்படும். இதற்காக கிராமிய மட்டத்தில் சமாதானக் குழுக்கள் அமைக்கப்பட உள்ளன." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## குடிசை அற்ற நகரமாக கொழும்பு மாநகரம்!

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் பத்தாண்டு காலப் பகுதியில் கொழும்பு மாநகரம் குடிசைகள் அற்ற அபிவிருத்தி நகரமாக தரமுயர்த்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொரளை பிரதேசத்தில் 'எலைற் ரெஸிடென்ஸிஸ்' மாடிக் கட்டட வீடமைப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் மற்றும் தனியார் துறையில் பணியாற்றுபவர்களுக்காக நிர்மாணிக்கப்படும் இந்த வீடமைப்புத் தொகுதியில் உள்ள வீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக விசேட கடன் வசதியும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

எதிரொலி
Ethiroli
ஞாயிறு, 08 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# யாரைக் கேட்கிறாய் வரி?

வலி.வடக்கில் 650 ஏக்கர் காணியை விடுவிப்பதாகச் சொல்லிவிட்டு, இப்போது அதில் 150 ஏக்கரைக் குறைத்து, 500 ஏக்கரை மட்டுமே விடுவிக்கலாம் என மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் கூறியிருக்கிறார். அரசாங்கத்துக்கு காணிகளை விடுவிக்க ஓரளவுக்கு மனமிருந்தாலும், இத்தனை நாளாக ஆண்டனுபவித்த காணிகளை விட்டுப் போக படைத்தரப்புக்கு கிஞ்சித்தும் மனமில்லை. அதனால் சாமி வரம் கொடுத்தும் பூசாரி வரம் கொடுக்காத கதையாக, ஏதேதோ காரணங்களைச் சொல்லிக் காணி விடுவிப்புக்கு முட்டுக்கட்டை போடுவதையே படைத்தரப்பு முழுநேரத் தொழிலாகக் கொண்டுள்ளது.

முன்னர் பாதுகாப்புக் காரணம், புலிகள் மீண்டும் வந்து விடுவார்கள் என்றெல்லாம் பூச்சாண்டி காட்டி, பிடித்து வைத்துள்ள காணிகளின் நிரந்தரக்குடியிருப்பாளர்களாக மாற படைத்தரப்பு சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனாலும் எத்தனை நாள் தான் ஒரே பல்லவியைப் பாடிக்கொண்டிருப்பது? அதானால் இப்போது வேறு பல்லவி.

படையினர் நிலைகொண்டிருக்கும் காணிகளில் கட்டடங்களை அமைத்தமைக்கும், இன்னொரு இடத்துக்குப் போய் அங்கே புதிய படைத்தளத்தை அமைக்கவும் செலவான, செலவாகப் போகும் தொகைகளையெல்லாம் கணக்கிட்டு, அந்தப் பணத்தைத் தந்தால் தான் காணிகளை விட்டுப் போவோம் என்று படைத்தரப்புச் சொல்கின்றனர். கேப்பாபிலவில் தொடங்கிய இந்தப் பல்லவியை இப்போது வலி.வடக்கிலும், ஏனைய இடங்களில் சுருதி பிசகாமல் படையினர் பாடுகின்றனர். கேப்பாபிலவில் படையினர் கேட்ட மில்லியன்களைக் கொடுத்து அவர்களின் வாயை அடைத்த பின்னரே, மீள்குடியேற்ற அமைச்சால் அந்தக் காணிகளை விடுவிக்க முடிந்தது.

"சரி, எப்படியும் காணிகள் மக்களிடம் கையளிக்கப்படத்தான் போகின்றன , அதற்கிடையில் முடிந்தவரை லாபம் பார்ப்போம் "என்கிற கணக்கில் தான் படைத்தரப்பின் இந்த நஷ்டஈடு என்கிற பெயரில் கோரப்படும் 'மறைமுகக் காணிவரி' அமைந்திருக்கின்றது.

ஆனால், உண்மையில் படையினர் தான் மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும். மக்களுக்குச் சொந்தமான காணிகளைப் பலவந்தமாகக் கையகப்படுத்தி, அங்கிருந்த சொத்துக்களைச் சூறையாடி, கட்டடங்களை அழித்து, இவ்வளவு காலமும் காலாட்டியபடி அந்தக் காணிகளில் ஐந்து சதம் கூடக் கொடுக்காமல் இருந்தமைக்கு பில்லியன் கணக்கில் தான் படைத்தரப்பு மக்களுக்கு பணம் கொடுக்க வேண்டியிருக்கும். அதுதான் நியாயமும் கூட. அந்த நியாயத்தைப் பார்க்காமல் ஏதோ தங்களின் சொந்தக் காணிகளை விட்டுக் கொடுப்பது போல, படைத்தரப்பு நடந்து கொள்வது எரிச்சலையே ஏற்படுத்துகின்றது. அரசாங்கம் காணிகளை விடுவிக்கச் சொன்ன பின்னரும் அதை மதிக்காமல், ' காசு தந்தால் தான் போவோம்' என்று அடம்பிடிக்குமளவுக்கு, அரசை விடவும் வலிமையான அமைப்பாக இராணுவம் மாறி வருவதையும் காணமுடிகின்றது. முதலில் 650 ஏக்கரை விடுவிக்கச் சம்மதித்த படையினர், திடீரென 150 ஏக்கரைக் கொடுக்க தடை போட்டதும் இந்தக் காசுப் பிரச்சினையால் தான் என்று கதைகள் அடிபடுகின்றன. இனி, பழையபடி மீள்குடியேற்ற அமைச்சு அந்தக் காணிகளுக்கான 'வரியை' படைத்தரப்புக்கு கட்டிய பிறகே பின்னொரு நாளில் அந்த எஞ்சிய 150 ஏக்கர் காணி விடுவிக்கப்படலாம். இப்படி இராணுவம் கோரும் விசித்திரமான 'காணி வரியை' கேட்கையில்,

"வரி....வட்டி...கிஸ்தி... யாரைக் கேட்கிறாய் வரி! எதற்கு கொடுக்க வேண்டும் கிஸ்தி!

எங்களோடு வயலுக்கு வந்தாயா! நாற்று நட்டாயா!

களை பறித்தாயா! ஏற்றம் இறைத்து நெடுவயல் பாயக்கண்டாயா!

அல்லது அங்கே கொஞ்சி விளையாடும் எம் குலப் பெண்களுக்கு மஞ்சள் அரைத்துப் பணிபுரிந்தாயா!

மாமனா! மச்சானா! மானங்கெட்டவனே!" என்னும் வீரபாண்டியக் கட்டப்பொம்மன் பட வசனமே மக்களின் மனதுக்குள் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# மட்டு. மாவட்டத்தில் 14 ஆலயங்கள் உடைப்பு



மட்டக்களப்பு, ஏப். 08

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் கடந்த மூன்று வருடங்களில் 14 இந்து ஆலயங்கள் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த கால யுத்தம் மற்றும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஆலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு நாவற்குடா இந்துக் கலாசார நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இந்த நிகழ்வு இந்துக் கலாசார மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.வியாழேந்திரன், சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியை இலக்கு வைத்தே இனந்தெரியாத நபர்களால் அதிகளவான ஆலயங்கள் உடைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலயங்களைப் புனரமைத்துக் கட்டுக்கோப்புடன் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம். இப்போது ஹம்பாந்தோட்டை தொடக்கம் பல இடங்களில் இருந்த இந்து ஆலயங்கள் காணாமல் போயுள்ளன. அதனைப் பற்றி நாங்கள் பேசுவதில் எந்த விதப் பயனும் இல்லை. எனினும், எல்லைப் பகுதியில் உள்ள ஆலயங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது. கடந்த ஆட்சிக்காலத்தில் இந்து ஆலயங்களுக்கு உதவிகளைப் பெறுவது எட்டாக் கனியாக இருந்தது . ஆனால், இப்போது நிலைமை மாறி விட்டது ." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## யானை தாக்கி பெண் சாவு

மதவாச்சி, ஏப். 08

மதவாச்சி கரம்பன்குளம் பகுதியில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி நேற்றுமுன் தினம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

48 வயதுடைய பெண்ணே உயிரிழந்தவர் ஆவார். அந்தப் பெண் வீட்டு முற்றத்தைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தபோதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது. (ஆ)

## தாய்லாந்தின் 3 போர்க் கப்பல்கள்



கொழும்பு, ஏப். 08

தாய்லாந்து நாட்டின் 3 போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லெண்ணப் பயணமாக வந்துள்ள இந்தக் கப்பல்கள் நாளைவரை தரித்து நிற்கும் என கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கப்பல்களில் கடற்படை அதிகாரிகள் பல்வேறு பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட உள்ளனர். (ஆ)

## போராடிச் சோர்ந்தவர்கள் முன் புதுவருடக் கொண்டாட்டம்



வவுனியா, ஏப். 08

வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் வன்னி இராணுவக் கட்டளை தலைமைப்பீடம் ஆகியன இணைந்து வவுனியா நகர சபை மைதானத்தில் நாளை மறுதினம் புதுவருடக் கொண்டாட்ட நிகழ்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

இந்தக் கொண்டாட்டம் நடைபெறும் மைதானத்துக்கு அருகாமையில் காணாமல் போனோரின் உறவுகள் 400 நாட்களைக் கடந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், அங்கு புதுவருடக் கொண்டாட்டம் நடத்தப்படுகின்றமை தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

காணாமல் போனோரின் உறவுகள் நடத்தும் போராட்டத்துக்கு எந்த விதப் பதிலும் அளிக்கப்பட்டாத நிலையில், இராணுவத்தினரை வைத்து அவர்களது போராட்டத் தளத்துக்கு அருகாமையிலேயே இந்தக் கொண்டாட்டத்தை நடத்துவது அவர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதாக அமையும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இராணுவ அனுசரணையில் இடம்பெறும் கொண்டாட்ட நிகழ்வுகள் காணாமல் போனோரின் உறவுகளுடைய போராட்டத்தை மலினப்படுத்துவதாக அமையும் என வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில், வவுனியா அரசாங்க அதிபர் இந்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்ளாது மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் , பிரதேச செயலக உத்தியோகத்தர்களைக் கொண்டு இந்த நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)




## இன்று நாளும் கோளும்

08.04.2018 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் பங்குனி மாதம் 25 ஆம் நாள்

அட்டமி பி.ப. 02.28 வரை | பூராடம் பி.ப. 05.56 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.30 - 06.00 | சுபநேரம் காலை 06.30 - 07.30 | எமகண்டம் காலை 12.00 - 01.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பணிவு | ஜெயம் | துணிவு | ஆர்வம் | மறதி | நன்மை | போட்டி | முயற்சி | கவனம் | இலாபம் | பெருமை | கவலை |

# இறந்த காலத்தை ஒளியூட்டிச் சென்ற தேவதைகள்


## பெயரிடாத நட்சத்திரங்கள் தொகுப்பை முன்வைத்து

இலங்கையில் இனரீதியான பாகுபடுத்தல்கள், படிமுறை அமைப்பாக்கங்கள் என்பன விருத்தியுற்ற சூழலில் "தமிழ், சிங்கள முரண்பாடு" தீவிரமான ஒரு சமூக அரசியல் பிரச்சினையாக உருவெடுத்த சூழலில் தமிழீழப் போராட்டம் வலுப்பெற்றது. தமிழ், சிங்கள அரசியல் தலைவர்களும், பௌத்த பிக்குகளும், தமிழ், சிங்கள மக்களிடையே இனவாதத்தைத் தூண்டி வளர்த்தனர். இனவாத நடவடிக்கைகளால் சிங்கள, தமிழ் மக்களிடையே உறவுகள் சீர்குலைந்தன. அவை வன்முறைகளுக்கும் வித்திட்டன. இக்காலப் பகுதியில் சிங்கள அரசியல் தலைவர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட தீவிரவாத இன அரசியல் தமிழ் மக்களின் உரிமைகளைத் தட்டிப் பறித்ததுடன் அவர்களை ஆயுதப் போராட்டத்தை நோக்கியும் தள்ளியது.

இத்தீவிரவாதப் போக்கு இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாக அமைந்ததோடு உள்நாட்டு யுத்தத்துக்கும், பாரிய அழிவுக்கும் காரணமாகவும் அமைந்தன. ஈழத்தில் 1983க்குப் பின் ஆயுதப் போராட்டம் பரந்து பட்ட ரீதியில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கடுமையான யுத்தத்துக்கு முகம் கொடுக்கலாயின்ர். அரசியல், பொருளாதார, சமூக முன்னேற்றம் கருதி மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்வினைச் சிதைத்து அவர்களின் வாழ்வினை நிர்மூலமாக்கியது. ஆயினும் ஆழமான விரிவான தளத்தில் தேசிய விடுதலைப் போராட்டக் கருத்துக்கள் முன்னவக்கப்பட்ட நிலையில் ஈழத்து பெண்களின் நவீன கவிதைகள் மக்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசின. புதிய சிந்தனைகள் முன் வைக்கப்பட்ட நிலையில் உரமும் செழுமையும் கொண்ட பிரக்ஞை பூர்வமான கவிதைகள், நேர்த்தியான மொழிகளுக்கூடாகப் புதிய படிமங்கள், புதிய வடிவங்களைத் தாங்கி வெளிவந்தன.

இக்காலப்பகுதியில் பெண்போராளிகளும் தம் வாழ்வை, தம் உணர்வைக் கவிதைகளாகப் படைத்தனர். இப்பின்னணியில் எழுதப்பட்ட கவிதைகள் "பெயரிடாத நட்சத்திரங்கள்" என்னும் பெயரில் நூலுருப் பெற்றுள்ளன. ஊடறு வெளியீடாக வந்த இத்தொகுப்பு அம்புலி தொடக்கம் தூயவள் ஈறாக 26கவிஞைகளின் 70கவிதைகளைக் கொண்டுள்ளது. புண்பட்ட மனங்களுக் கூடாகப் போரின் வடுக்களைப் பேசும் ஈழத்துக்கவிதைகள் யுத்த சூழலுக்குள் வரலாற்றுச் சம்பவங்களை, அனுபவங்களைப் பிற்புலமாகக் கொண்டு எழுதப்பட்டன. இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகள் அதிகம் போரையும் போர் சார்ந்த நடைமுறை வாழ்வையுமே எடுத்துரைத்தன.

போரினை முகம் கொண்டவராகவும் போரின் பங்காளிகளாகவும் செயற்பட்ட ஆயுதம் தரித்த இப்போராளிகளின் கவிதைகள் மரபார்ந்த தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடுகின்றன.




பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிரான குரலாக எழுகின்றன. இக்கவிதைகள், பெண் விழிப்புணர்வுக்கூடாக பெண் விடுதலையை அவாவி நிற்கின்றன. இவர்களின் பெரும்பாலான கவிதைகள் உணர்வின் கருவூலங்களாகவும், கருத்துருவாக்கங்களின் வடிவங்களாகவும் உருக்கொள்கின்றன. பெண்ணியல் அனுபவங்களுக்கூடாக விரியும் இப்பெண்ணிய மொழி வீரியம் மிக்க சிறந்த கவிதைகளை தமிழ் இலக்கிய உலகுக்கு அளிக்கிறது.

கண்ணுறக்கம் தவிர்ந்த நடுநிசி
எல்லை வேலியில்
நெருப்பேந்துகிறது என்னிதயம்
ஓராயிரம் விழிகளின் உறக்கத்துக்கான
என் காவலிருப்பு
நாளையும் நான் வாழவேண்டும்


பலர் உறங்கிக் கொண்டிருக்க அவர்களுக்காக காவலிருக்கும் பெண், விடுதலைக்காய் மற்றும் தன் இழப்பின் காரணமாக போராட்ட வாழ்வில் இடைவெளி வந்து விடும் என்னும் அச்சத்தில் உணர்வின் தளத்தில் கட்டமையும் அம்புலியின் இக்கவிதை தியாகத்தின் உறைவிடமாய் விளங்கும் பெண்ணின் மனோநிலையை விளக்கிச் செல்கிறது. இது போல காவலரணில் கிழிந்த ஆடையுடன் நின்று கொண்டு மக்களை கவலையுடன் நோக்கும் "அவள் ஒன்றுக்கும் அசையாள்" என்ற மலைமகளின் கவிதையும் மனிதத்தை நேசித்த போராளிகளின் ஈரம் உலரா உள்ளத்தை வெளிக்காட்டி நிற்கின்றன.

சிங்கள இனவன்முறையையும் மக்களின் துன்பியலையும் விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியையும் போர் சார்ந்த வாழ்க்கை முறைகளையும் பேசும் கப்டன் வானதி, மேஜர் பாரதி, கப்டன் கஸ்தூரி முதலானோரின் கவிதைகள் மனித வாழ்வினை களமுனையுடன் இணைத்துப் பேசுகின்றன. கப்டன் வானதியின் "நாளைய சந்ததிக்கு நடந்ததைக் கூறு" என்னும் கவிதை தமிழீழ தேசத்தின் வீர விடியலுக்காய் தம் சுகம் மறந்து காட்டிலும் மழையிலும் நின்று போராடிய போராளிகளின் உன்னத தியாகத்தை எடுத்துகிறது.

போராடச் சென்ற பெண் போராளி தன் தாயினை நினைத்து ஏங்குவதாய் அமையும் மேஜர் பாரதியின் "அன்பான அம்மா" என்னும் கவிதை தன் மகவை நேசித்த தாயின் உள்ளார்ந்த அன்பை வெளிப்படுத்துகிறது. தாயின் நேசிப்பும், மகவின் ஏக்கமும், தேசம் மீது கொண்ட அதீத அன்பும் பாரதியின் இக்கவிதையில் விபரிக்கப்படுகிறது.

தேசவிடுதலையில் தன்னுயிர் நீத்த, பங்கெடுத்த போராளிகளின் வாழ்வையும், அவர்களது இறந்தகால இருப்பையும் நிகழ்கால தேசத்துக்கு உணர்த்துமுகமாக எழுதப்பட்ட இக்கவிதைகள் தேசத்தின் மகுடத்துக்காய் போராளிகள் பட்ட மனித அவலங்களை எடுத்துரைக்கிறது. ஈழத்தில் நடந்த துன்பியலின் வடுக்களை நடப்பியல் வாழ்வுக்கூடாக எடுத்துரைக்கும் இத்தொகுப்பு ஈழத்தில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்ற காலப்பகுதியில் தாயக மக்களின் விடுதலைக்காய் போராடி உயிர்க் கொடை தந்து நீத்த போராளிககளின் வாழ்க்கை அனுபவங்களை அவர்கள் போரில் எதிர் கொண்ட பாடுகளைப் பாடுகின்றன. ஈழத்தின் பெயரிடப்படாத நட்சத்திரங்களின் வாழ்வியல் சுவடாக ஒளிர்ந்து, தனித்துவமான பெண்ணுணர்வுகளை உருக்கமாகவும் உயிரோட்டமாகவும் பதிவு செய்யும் இக்கவிதைகள் சமுதாய வாழ்வு பற்றிய தெளிவை, விழிப்புணர்வை ஊட்டி நிற்பவை. கடந்த காலத்தின் வாழ்க்கைச் சுவடாய் அதன் நிலைப் பிரமாணமாய் எழுந்து என்றும் எப்போதும் அழியாது நிலைத்து நிற்பவை. தமிழ் மக்களின் இதயங்களைத் தொட்ட இப்போராளிகள் ஒவ்வொருவரும் உள்ளத்தால் நினைவு கூரத்தக்கவர்கள். அவ்வகையில் இத்தொகுப்பு முக்கியமானது. முதன்மையானது.

**- சாங்கிருத்தியன்**






கலாநிதி கந்தையா சிறிகணேசன் எழுதிய சுதந்திரம் தென்னாசியா மொழி பெயர்ப்புக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு மற்றும் My choice என்ற தலைப்பிலான இலங்கை தமிழ் கவிதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கலாநிதி அகலங்கன் தலைமையுரை ஆற்றுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!



கல்பொத்தயாய , ஏப்.08

கல்பொத்தயாய, ஜூலம்பிட்டிய பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மித்தெனிய பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வலஸ்முல்ல நீதிவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட உள்ளார் என மித்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## விவசாய உற்பத்திக்கு வெளிநாட்டு முதலீடு

கொழும்பு , ஏப்.08

சிரம சக்தி மக்கள் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட உள்ள விவசாய உற்பத்திக் கிராமத்துக்கான வேலைத்திட்டத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதற்கு சுவீடன் மற்றும் இந்திய முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

நாட்டில் மரவள்ளி உற்பத்தியைப் பிரபல்யப்படுத்தும் வகையில் மரவள்ளி மா தயாரிக்கும் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கே இவ்வாறு முதலீடு செய்யப்பட உள்ளது.

முதலீட்டாளர்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து இது தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்தத் திட்டத்துக்குள் பொலனறுவை, திருகோணமலை, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மாவட்டங்கள் இணைக்கப்பட உள்ளன. இதன் கீழ் சுமார் 6 ஆயிரம் ஹெக்டேயர் காணியில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

விவசாயிகளை மரவள்ளி பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தி, அவர்களிடம் இருந்து கொள்வனவு செய்யப்படும் மரவள்ளியை இந்தப் புதிய தொழிற்சாலையினூடாக மாவாக மாற்றி அதன் மூலம் சீனி உற்பத்தியை மேற்கொள்ளவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த முதலீட்டின் ஊடாக விவசாயத் துறையில் பெருமளவு தொழில் வாய்ப்புக்கள் உருவாகும். நாட்டில் சீனி உற்பத்திக்காக செலவாகும் பெருமளவு செலவைக் குறைக்கவும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# சுழற்சி முறையில் தவிசாளர் பதவி



ஓட்டமாவடி , ஏப்.08

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் பதவி இரண்டு வருடத்துக்கு ஒருவர் என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும், கிராமியப் பொருளாதார பிரதியமைச்சருமான எம்.எஸ்.எஸ். அமீர் அலி தெரிவித்தார்.

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உதவித் தவிசாளரை தெரிவு செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை, பிரதேச சபையில் இடம்பெற்றது. இதனை அடுத்து, பிரதியமைச்சரின் இல்லத்தில் தற்போதைய தவிசாளர் ஐ.ரி.அஸ்மிக்கும், பிரதேச சபை உறுப்பினர் ஏ.எம்.நௌபருக்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திர கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் இணைந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அந்த வகையில் கூட்டாட்சியின்படி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்குத் தவிசாளர் பதவியும், சுதந்திரக் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் வழங்கப்படும் என்றும், கட்சிகளுக்கிடையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளர் பதவி சுழற்சி முறையில் முதல் இரண்டு வருடங்களுக்கு ஐ.ரி.அஸ்மிக்கும், மிகுதி இரண்டு வருடம் ஏ.எம்.நௌபருக்கும் வழங்கப்படும் என்ற ஒப்பந்தத்தில் இருவரும் கைச்சாத்திட்டனர். (ஆ)

# வவுனியா பொலிஸார் பரிசோதனை அணிவகுப்பு



வவுனியா , ஏப்.08

வவுனியா மாவட்டப் பொலிஸாரின் பரிசோதனை சிறப்பு அணிவகுப்பு நேற்று இடம்பெற்றது.

இந்த அணிவகுப்பு வவுனியா பொலிஸ் அத்தியேட்சகர் அலுவலக வளாகத்தில் ஆரம்பமாகி வவுனியா நகரின் ஊடாக சென்றது.

இதில் சகல பொலிஸ் பிரிவுகளை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், வன்னிப்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், பொலிஸ் அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)

# ‘இழந்தவற்றை கட்டி எழுப்புவோம்’



ஆண்டாங்குளம், ஏப்.08

நாங்கள் எல்லாவற்றையும் இழந்தோம். ஆனால் எங்களுடைய கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களை ஒரு போதும் இழந்து விடக்கூடாது என மாந்தை மேற்குப் பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாந்தை மேற்கு பிரதேசச் செயலகத்தின் ஏற்பாட்டில் சித்திரை புத்தாண்டு பெருவிழா நேற்றுக் காலை 7 மணியளவில் ஆண்டாங்குளம் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“நான் இந்த மண்ணுக்கு உரியவன். 30 வருடப் போரால் பலவற்றை இழந்துள்ளோம் . கடந்த கால வன்முறைச் சம்பவங்கள் மக்களின் வாழ்க்கையில் பல காயங்களை ஏற்படுத்தி உள்ளது. இந்த மாந்தை மேற்குப் பிரதேசம் பழைய மகிழ்வுடன் கட்டி எழுப்பப்பட வேண்டும் .” என்று அவர் தெரிவித்தார்.



## அப்ப உங்களுக்கு நாட்டு நடப்புத் தெரியாதோ?

“போர் வெற்றியைக் கொண்டாடமாட்டம் நாங்கள்” – எண்டு இலங்கை அரசாங்கம் ஐ.நா மனித உரிமைப் பேரவைக்கு உறுதி வழங்கியுள்ளது. எண்டது இண்டைய செய்தி. அரசாங்கம் தாங்கள் கொண்டாட மாட்டம் எண்டு உறுதி வழங்கியாச்சு. ஆனால் சிங்களச் சனம் கொண்டாடாது எண்டு அவை உறுதியாச் சொல்லேல்லையே.

ஆனால் ஐ.நாவுக்கு அரசாங்கம் உறுதி வழங்கினமாதிரியே சிங்கள ஆக்களும், ஆமிக்காரரும் நடக்கப் போகினம்? எங்கடை ஆக்களும் செத்தவை அதாலை நாங்களும் கொண்டாடப் போறம் எண்டு சிங்களச் சனம் வெளிக்கிட்டால் ஒரு தரும் ஒண்டும் செய்யேலாது. ஆமிக்காரரும் எங்கடை ஆக்கள் தானே செத்தவை எண்டு சொல்லி காம்பிலை கொண்டாடினால் என்ன செய்யிறது? சும்மா ஒரு பேச்சுக்கு அரசாங்கம் கதைக்கப்பிடாது. நடை முறையிலை நடக்கக்கூடியதைக் கதைக்க வேணும். உப்பிடிப் பேய்க்காட்டக்கூடாது. அது நல்லிணக்கத்துக்கு அழகில்லை. கொண்டாடுகிறவை கொண்டாடட்டும், ஆனால் எங்கடை மனம் நோகிறமாதிரி ஒண்டும் செய்யாமலும், சொல்லாமலும் இருந்தால் சரி!

பேய்க்காட்டப்போய்த்தானே இண்டைவரை பிரச்சினை வீங்கிப்போய்க் கிடக்குது ? வாங்கோ பேசுவம் எண்ணுறது. பிறகு போனாப்பிறகு பேய்க்காட்டிறது. இப்ப கூட என்ன சொல்லினம் எண்டு தெரியுமே? போர் வெற்றிக் கொண்டாட்டம் எண்டதை “நினைவு தினம்” எண்டு மாத்துவம் எண்டு சொல்லி இருக்கினம். அதாவது கொழுக்கட்டை எண்ட பேரை மாத்தி மோதகம் எண்டு வைக்கிறம் எண்டதைப்போல கிடக்கிது. வெளிப்பார்வைக்கு வேறை மாதிரிக் கிடக்குமே ஒழிய, உள்ளுடல் ஒண்டுதான். அரசாங்கம் இப்பதான் முதல் தடவை இது மாதிரிச் சொல்லி இருக்கிறதா செய்தி ஒண்டைக் கான் போனிலை பாத்தனான் எண்டு சொல்லுறான் முதலி.

கொண்டாட்டம் நடக்கும் வேறை வடிவத்திலை எண்டு சொல்லாமல் சொல்லி இருக்கினம். இருந்தாலும் இதை ஒரு அறிக்கையா அடிச்சு ஐ.நாவிலை வந்த எல்லாரிட்டையும் வாசியுங்கோ எண்டு குடுத்திருக்கினம். பறவாயில்லை.

அரசியல் எண்டு பாக்கேக்கை பரபரப்புத்தானே ஒழிய வேறை விசியம் ஒண்டும் இல்லை. எத்தினை பெரிய தீர்மானம் எடுத்திட்டம் எண்டு பீத்தினாலும் நடைமுறைப்படுத்தேக்கை கோட்டை விட்டிடுவினம். அவையிக்கை ஒரு ஒழுங்கிருக்கு. நாங்கள் எல்லாரும் ஒத்துக் களவெடுப்பம் ஆரை ஆரும் காட்டிக் குடுக்கப்பிடாது எண்டு. சனம் தான் அவை சொல்லுறதெல்லாத்ததையும் உண்மை எண்டு நம்பி ஏமாறுது.

ரணிலுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணையிலை ரணில் வெண்டாப்பிறகு அவை அந்தப் பிரேரணையைச் சமர்பிச்ச ஆக்கள்மேலை அவைக்கு எதிரா நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து சபாநாயகரிட்டைக் குடுத்திட்டுப் பேப்பரிலை எல்லாம் போட்டு விசியத்தைப் பரபரப்பாக்கிச் சினம், சனமும் ஏதோ ஒரு கலவரம் நடக்கப்போகுது எண்டு பாத்தால் அது புஷ்வாணமாப் போச்சுது. ரணில் சொன்னவராம் திருப்பி வேண்டுங்கோ எண்டு.

உப்பிடி எத்தினை நாடகம் நடிச்சிட்டினம். உலகத்திலை சிறந்த நடிகனுக்கு விருது இனிக் குடுக்கிறதெண்டால் அது அரசியல்வாதியளுக்குத்தான் குடுக்க வேணும். அவைதான் இயல்புமாறாமல் நடிக்கிறவை. அதுக்குள்ளையும் இப்ப பாக்கேக்கை மைத்திரிக்கும் குடுக்கலாம். ரணிலுக்கும் குடுக்கலாம். ஆனால் கொஞ்சப் புள்ளியளாலை ரணில் அதிலையும் வெல்லுவர். என்ன சந்தேகமோ? அப்ப உங்களுக்கு நாட்டு நடப்புத் தெரியாதெண்டதுதான் விளக்கம்.

**- வில்லங்கம் விநாசி**

# 211 சபைகள் மொட்டின் வசம்

கொழும்பு, ஏப்.08

சிறிலங்கா பொதுஜன முன்னணி இதுவரை 211 உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் அமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

தேர்தலின் போது, 167 உள்ளூராட்சி சபைகளில் எந்தக் கட்சியும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான்மைப் பலத்தைப் பெறவில்லை.

இந்தநிலையில், அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத 56 சபைகளின் தவிசாளர் பதவிகளைக் கைப்பற்றி, சிறிலங்கா பொதுஜன முன்னணி அவற்றையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளது.

இதன் மூலம், இதுவரை 211 உள்ளூராட்சி சபைகள் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் வசம் வந்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களை வென்ற, காலி, நீர்கொழும்பு, பதுளை, தெகிவளை - கல்கிசை மாநகர சபைகள் உள்ளிட்ட பல உள்ளூராட்சி சபைகளிலும், சிறிலங்கா பொதுஜன முன்னணியே ஆட்சியமைத்திருக்கிறது.

ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களைப் பிளவுபடுத்தியும், தம்பது பக்கம் இழுத்தும், சிறிலங்கா பொதுஜன முன்னணி, உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைத்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், கட்சி மாறி வாக்களிப்பதற்கு 10 மில்லியன் ரூபா தொடக்கம், 100 மில்லியன் ரூபா வரை பேரம் பேசப்படுவதாவும், தகவல்கள் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# அமைச்சர்களால் அதிகரித்த செலவு

அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டிய சூழ்நிலையில், அமைச்சர்கள் பெரும் எண்ணிக்கையான தனிப்பட்ட பணியாளர்களை சேவைக்கு அமர்த்தியிருப்பதால் அரசாங்க செலவீனம் அதிகரித்திருப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றஞ்சாட்டினார்.

"ஜனாதிபதி மற்றும் பிரதமர் இந்த விவகாரத்தில் அரசியலமைப்பை மீறியுள்ளனர்.

ஒன்றுக்கு மேற்பட்ட அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கும் அமைச்சர்களுக்கு இரண்டு அல்லது மூன்று தொகுதி தனியார் பணியாளர்கள் அவசியமில்லை. 19ஆவது திருத்தத்துக்கு அமைய அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டியிருக்கின்றபோதும், அமைச்சர்கள் எண்ணிக்கை குறைக்கப்படவில்லை. இவ்வாறான நிலையில் அமைச்சர்கள் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையைவிட தனியார் பணியாளர்களை பணியில் அமர்த்தியுள்ளனர்" என தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மகிந்த அமரவீர தனது அமைச்சின் கீழ் 21 தனிப்பட்ட பணியாளர்கள் சேவையில் இருப்பதாகவும், தான் சட்டத்தையோ அல்லது சுற்றுநிருபத்தை மீறியோ எவரையும் பணியில் அமர்த்தவில்லையென கூறினார்.

## நூல்கள் வெளியீடு

ஆழியாள் மொழிபெயர்த்த பூவுலகைக் கற்றலும் கேட்டலும் மற்றும் ஈழப் பெண் போராளிகளின் கவிதைகளின் தொகுப்பான பெயரிடாத நட்சத்திரங்கள் ஆகிய இரு நூல்களின் அறிமுக விழா இன்று மாலை 3.30 மணிக்கு டேவிட் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல்கல்லூரியில்நடைபெறவுள்ளது. சு.ஸ்ரீகுமரன் (இயல்வாணன்) தலைமையில்நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சி.கருணாகரன், ந.குகபரன், நா.நவராஜ், சி.ரமேஷ், யாழினி யோகேஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவர்.

# தொடர்ச்சிகள்

### ரணிலோடு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களில் இலங்கை அரசியலில் ஒரு முக்கிய தாக்கம் ஏற்பட்டிருந்தது. நல்லாட்சி அரசு நீடிக்குமா என்பது தொடர்பிலும் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. இந் நிலையில் தான் கூட்டமைப்பு தெளிவான ஒரு முடிவை எடுத்திருந்தது. கடந்த .2015 ஆம் ஆண்டு மக்கள் வழங்கிய ஆணையின் அடிப்படையில் இந்த அரசாங்கம் செயற்படுவதற்கு இன்னும் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

அதனடிப்படையில் புதிய அரசியலமைப்புக்கான உருவாக்கப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளினால் அவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. ஆகவே அதனைத் தொடர்ந்து முன்னெடுக்க தேசிய அரசாங்கத்துக்கு இன்னும் 2 வருட காலம் இருக்கின்றது. இந்த நிலையில் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்ட காரணத்துக்கான சந்தர்ப்பத்தை குழப்பும் வகையில் நாங்கள் செயற்படக் கூடாது என்பதே எங்களின் முடிவாக இருந்தது.

மேலும் அத்தகைய புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகள் உள்ளிட்ட பல விடயங்களைக் குழப்புகின்ற வகையில் பொது எதிரணி முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் உடந்தையாகவும் இருக்க முடியாது. அதனடிப்படையிலையே நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து பிரதமருக்கு ஆதரவளிப்பதானதட தீர்மானமொன்றை நாங்கள் எடுத்திருந்தோம்.

எங்களது முடிவு தான் இந்த விடயத்தில் பிரதானமாக இருந்தது. அதனடிப்படையில் தான் பலரும் செயற்பட்டிருக்கின்றார்கள். குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சிறுபான்மைக் கட்சிகள் அனைத்தும் எங்களது நிலைப்பாட்டையே எடுத்திருந்தன. அதனால் இதனை இனவாத ரீதியாகச் சித்தரிக்க தெற்கில் பல கட்சிகள் முனைகின்றன.

இதேவேளை நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டமைப்பு ஜனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தது. அதில் பேசிய குறிப்பாக பத்து விடயங்கள் குறித்தும் ஏற்கனவே செய்திகளில் வந்திருக்கின்றன. இந்நிலையில் அந்த பத்து விடயங்கள் குறித்து பிரதமருடன் கூட்டமைப்புக்கு உடன்பாடு அல்லது ஒப்பந்தங்கள் இருக்கின்றனவா என சர்வதேச ஊடகங்கள் எம்மிடம் கேட்டிருந்தன. உண்மையில் எந்தவித ஒப்பந்தங்களையும் நாங்கள் ரணிலோடு செய்துகொள்ளவில்லை. ஆனால் அந்தப் பேச்சுக்களின் போது நல்லாட்சி அரசாங்கம் முன்னெடுத்து வருகின்ற செயற்பாடுகளுக்குத் தடையாக இருக்கின்ற பல விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தோம். அப்படி ரணிலிடம் கூறிய விடயங்களை நாடாளுமன்றிலும் தெரிவித்துள்ளோம். எனவே ஊடகங்கள் சொல்வதைப் போல எமக்கும் ரணிலுக்கும் இடையில் எந்தவொரு ஒப்பந்தமும் செய்யப்படவில்லை என்பதே உண்மை. இதையே அமைச்சர் மனோ கணேசனும் தெரிவித்திருந்தார்" என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

### நில ஆக்கிரமிப்பை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

"முல்லையில் மகாவலி அதிகார சபையினூடாக தொடர்ச்சியாக தமிழர்களின் நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருதாக மாகாண சபையின் கடந்த அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் எதிர்வரும் 10 ஆம் திகதி முல்லைத்தீவில் மாபெரும் போராட்டமொன்றையும் மாகாண சபையினர் நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் மகாவலி அதிகார சபையின் மகாவலி 'எல்' வலயத்தினால் ஏற்படுத்தப்படுகின்ற ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் போது இந்த ஆக்கிரமிப்புக்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டுமென்று கோரினார். அதற்கு இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி, அத்தகைய ஆக்கிரமிப்பு, குடியேற்றங்களை உடன் நிறுத்த நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இதனால் நாளை திங்கட்கிழமை முல்லைத்தீவில் நடைபெற இருந்த மகாவலி அதிகார சபையின் கூட்டமும் நிறுத்தப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.(அ)

### போர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர் வெற்றிக் கொண்டாட்டங்களோ நடத்தப்படாது என அந்த உறுதிமொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் வெற்றிக் கொண்டாட்டம் என்ற பெயர் "நினைவு தினம்" என மாற்றப்படும் எனவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. முதல் தடவையாக இலங்கை அரசாங்கம் இவ்வாறான ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் பங்கேற்ற அனைத்து இராஜதந்திரிகளுக்கும் இந்த அறிக்கையை அரசாங்கம் வழங்கியுள்ளது என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

### தமிழ்ப்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முக்கியமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு என்று பணிக்கு ஆட்களை அனுப்ப அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு நிறுவனங்கள் உள்ளன. இந்த நிறுவனங்கள் தாங்கள் வீட்டு வேலை செய்ய அனுப்பும் பெண்கள் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு கர்ப்பமாக மாட்டார்கள் என அங்கு வேலைக்கு அமர்த்துபவர்களிடம் உறுதியளிக்கின்றனர்.

எனவே இதை நிறைவேற்றும் விதத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பத் தெரிவு செய்யப்படும் பெண்களுக்கு கருத்தடை ஊசி போடப்படுகிறது.

இது தொடர்பாக பேசிய ஒரு நிறுவனத்தின் முகவர் வெளிநாடுகளுக்கு அனுப்பபடுவர்களுக்கு அரசு சார்பாக மருத்துவ சோதனை நடைபெறும், அதன் பின்னரே நாங்கள் கருத்தடை சாதனங்களை அளிக்கிறோம் என கூறியுள்ளார்.

இது டெபோ ப்ரோவெரா என்னும் மருந்து ஊசி வழியாக செலுத்தப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.(அ)

### கரைச்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான 18 உறுப்பினர்களும் ஒன்றாக இணைந்து, ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை கூட்டமைப்புக்குள்ளும் தவிசாளராகத் தெரிவு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் வேழமாலிகிதன் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள் உள்ளதால், அவரை அங்கீகரிப்பதில் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்களிடம் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது

எனவே. கிளிநொச்சி நகரை வளப்படுத்தக் கூடிய ஆளுமை மிக்க ஒருவரையே தாம் விரும்புவதாகவும் மக்களால் நன்மதிப்பு மிக்க ஒருவரை நியமிக்குமாறு தலைமையிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள கரைச்சிப் பிரதேச சபைக்கான தவிசாளர், உதவித் தவிசாளர் தெரிவுகள் பலத்த போட்டியின் மத்தியிலேயே நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

### ஜேர்மனியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றுள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக 30 இற்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கலாம் என பொலிஸார் கூறியுள்ளனர். காயமடைந்தவர்களில் 6 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர். இதுவொரு பயங்கரவாத சம்பவமாக கருதப்படுகின்ற போதிலும், உத்தியோகபூர்வமாக இதுவரையிலும் உறுதி செய்யப்படவில்லை. இதன் போது வாகனத்தின் சாரதி தன்னை தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

### 650அல்ல... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் இரண்டு நாட்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில், வலி.வடக்கில் 650 ஏக்கர் காணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி விடுவிக்கப்படும் என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

### ரணிலே தலைவர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்குழு மற்றும் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தில் கட்சியின் மறுசீரமைப்பு குறித்து தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன் போது, கட்சியின் தலைமைத்துவத்திலும் மாற்றம் இடம்பெறும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே தொடர்ந்தும் பதவி வகிக்க வேண்டும் என்பதே செயற்குழு அங்கத்தவர்களினதும், நாடாளுமன்ற குழுவினரதும் பெரும்பாலானோரின் கருத்தாக இருந்தது என்று விஜேபால ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தச் செயற்குழுக் கூட்டத்தின் இடைநடுவிலேயே நாடாளுமன்ற உறுப்பினரும், ஐ.தே.கவின் அடுத்த தலைவராக வருவார் என எதிர்பார்க்கப்பட்டவருமான சஜித் பிரேமதாஸ வெளியேறினார் என்றும் கூறப்படுகின்றது. (அ)

### கூட்டாட்சியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட்டன. ஆனால் தேர்தல் முடிவடைந்த பின்னர் நான் ஒரு விடயத்தைக் கூறியிருந்தேன்.

உள்ளூராட்சி மன்றங்களில் அறுதிப் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் எந்தக் கட்சி அதிக ஆசனங்களைக் கொண்டுள்ளதோ அங்கு அந்தக் கட்சியினர் ஆட்சிமைக்க ஏனைய கட்சிகள் அதற்கு ஆதரவை வழங்க வேண்டுமெனக் கோரியிருந்தேன்.

ஆயினும் இந்தக் கோட்பாட்டின் பிரகாரம் ஒழுக மாட்டோமென உள்ளூராட்சி மன்றங்களை அமைக்கும் முதல்நாளிலேயே அவர்கள் செயலில் காட்டியிருந்தனர். அதனால் நாம் மட்டும் அதனைத் தனியாகக் கடைப்பிடிக்க முடியாது என்பதால் நாமும் அதற்கு மாறான செயற்பாடுகளை முன்னெடுத்து சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை உள்ளிட்ட சபைகளையும் கைப்பற்றியிருக்கின்றோம்.

இதனை வைத்து ஈ.பி.டி.பி உள்ளிட்ட கட்சிகளுடன் கூட்டமைப்பு கூட்டிணைவு, கூட்டாட்சி, கூட்டு என்றெல்லாம் ஊடகங்கள் அடிப்படை இல்லாத செய்திகளை வெளியிட்டிருந்தன. இவை எல்லாவற்றுக்குமாக நெடுந்தீவுப் பிரதேச சபையில் ஆட்சியை கூட்டமைப்பு கைப்பற்றியதனூடாக பதில் சொல்லியிருக்கிறோம்" என்றும் அவர் தெரிவித்தார். (அ)


### பிரதி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

அதேவேளை பதவி விலகும் கடிதத்தை ஒரு மாதத்துக்கு முன்னரே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதி சபாநாயகர் தனது பணிகளை முன்னெடுக்க இடமளிக்கப் போவதில்லை என நாடாளுமன்றத்தில் ஐ.தே.கவினரால் தெரிவிக்கப்பட்டதையடுத்தே சபாநாயகர் இதனைக் கூறியுள்ளார். (அ)

# விண்வெளியில் சொகுசு விடுதி




நியூயோர்க், ஏப்.08

விண்வெளியில் மக்கள் பயன்பாட்டுக்காக 'அரோரா ஸ்டேஷன்' என்ற சொகுசு விடுதி ஒன்றைக் கட்டுவதற்கு ஓரியன் ஸ்பேன் நிறுவனம் திட்ட மிட்டுள்ளது.

பொதுவாக மக்கள் கூட்டம் அதிகம் வரும் இடங்களில் விடுதிகள் கட்டப்படுவது வழக்கம். ஆனால், ஓரியன் ஸ்பேன் என்ற விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், விண்வெளியில் இந்த சொகுசு விடுதியைக் கட்டத் திட்டமிட்டுள்ளது.

விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ள இந்தப் பணிகள், 2021 ஆம் ஆண்டு நிறைவடையும் எனக் கூறப்படுகிறது. இந்த விடுதியில் 2022 ஆம் ஆண்டில் இருந்து மக்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். பூமியில் இருந்து தக்க பயிற்சி கொடுக்கப்பட்ட பின் மனிதர்கள் இந்த விடுதிக்கு அழைத்து செல்லப்படுவார்கள். இதற்காக மிகவும் பாதுகாப்பான முறையில் இயங்கும் ரொக்கெட் வடிவமைக்கப்படும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த விடுதி பெரிய ஜெட் ரொக்கெட் போல இருக்கும். இதன் நீளம் 43.5 அடியும், அகலம் 14.1 அடியும் இருக்கும். இதன் கொள்ளளவு 5,650 கன அடி இருக்கும். இது மக்கள் தங்குவதை மட்டுமே குறிக்கோளாக கொண்டு அமைக்கப்பட உள்ளது. இங்கு "ஓரியன் ஸ்பேன்" நிறுவனத்தின் அலுவலகமும் கட்டப்பட உள்ளது.

இதில் 6 பயணிகள் மற்றும் 2 அதிகாரிகள் ஒரே சமயத்தில் தங்க முடியும். இதில் படங்களில் காட்டுவது போல மிதந்து கொண்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லை. சாதாரண பூமியில் இருக்கும் பகுதி போலவே இதில் செயற்கைப் புவியீர்ப்பு விசை உருவாக்கப்பட்டு இருக்கும். இதனால், இங்கு தங்கும் நபர்களுக்குப் பெரிய அளவில் பயிற்சி தேவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடுதி பூமியில் இருந்து 320 கிலோ மீற்றர் தூரத்தில் கட்டப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஜெட்லிக்கு சிகிச்சை

புதுடில்லி,ஏப்.08

இந்திய மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி, சிறுநீரக கோளாறு காரணமாக, டில்லி 'எய்ம்ஸ்' மருத்துவமனையில் நேற்று முன் தினம் இரவு சேர்க்கப்பட்டுள்ளார்.

அவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட உள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனால், அடுத்த வாரம் அவர் செல்லவிருந்த பிரிட்டன் பயணத்தை ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# கைரேகை பெறும் போது சுய நினைவுடன் ஜெ.!


ALL-INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM
FORM B

சென்னை, ஏப்.08

தஞ்சாவூர் அரவக்குறிச்சி இடைத்தேர்தல் வேட்பு மனுக்களில் கைரேகை பெறும் போது, மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சுய நினைவுடன் இருந்தார் என்று அரச மருத்துவர் பாலாஜி தெரிவித்துள்ளார் என சசிகலா தரப்பு வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன் தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஆறுமுகசாமி தலைமையிலான ஆணையம் விசாரணை நடத்தி வருகிறது. அந்த ஆணையத்தில் சசிகலா தரப்பினரின் குறுக்கு விசாரணையில் மருத்துவர் பாலாஜி ஆஜராகியுள்ளார்.

அந்த விசாரணை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சசிகலா தரப்பு வழக்கறிஞர் இவ்வாறு கூறினார்.

"தஞ்சாவூர், அரவக்குறிச்சி இடைத்தேர்தல் வேட்பு மனுக்களில் கைரேகை பெறும் போது மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா சுய நினைவுடன் இருந்துள்ளார். தனக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் என்ன என்பது குறித்துக் கேட்டறிந்துள்ளார். பின்னர் அப்பலோ மருத்துவர் ஆப்ரஹாமின் வேண்டுகோளின் பேரில், கைரேகையைப் பதிவு செய்ய ஜெயலலிதாவின் உதவியாளர் பூங்குன்றன் உதவியுள்ளார்.

அப்லோவில் ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை தொடர்பான தகவல்கள் 10 இற்கும் மேற்பட்ட முறை ஓ.பன்னீர் செல்வத்துக்குத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர், இராதாகிருஷ்ணன் ஆகியோரிடமும் சிகிச்சை தொடர்பான தகவல்கள் பகிரப்பட்டுள்ளன. இந்த விவகாரத்தில் எங்கள் தரப்பில் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர் ஆகியோரை விசாரிக்கக் கோரி மனுத்தாக்கல் செய்வோம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)



# சிரியாவில் தாக்குதல்: 27 பேர் உயிரிழப்பு

பெய்ரூட், ஏப். 08

சிரியாவில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் சிக்கி, ஐந்து குழந்தைகள் உட்பட 27 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாருக்கு எதிராகப் போராடும் கிளர்ச்சிக்குழுக்களை ஒடுக்கும் பணியில், அரச படையினர் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

6 ஆண்டுகளாக நடந்து வரும் இந்த உள்நாட்டுப் போரில் , இலட்சக்கணக்கான மக்கள் இதுவரை பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில், சிரியாவின் கிழக்கு கூட்டாப் பகுதியில் உள்ள டவுமா நகரில் நேற்றுமுன் தினம் கிளர்ச்சியாளர்களை குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. (ஆ)

# நாடாளுமன்றைக் கலைக்க மலேசிய மன்னர் உத்தரவு

கோலாலம்பூர்,ஏப்.08

மலேசிய நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு மன்னர் உத்தரவிட்டுள்ளார் என அந்த நாட்டின் பிரதமர் நஜிப் ரஸாக் அறிவித்துள்ளார்.

மலேசிய அரசின் நிதியில் இருந்து 680 மில்லியன் டொலர் முறைகேடு செய்யப்பட்டு, அந்தத் தொகையை தனது தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு மாற்றிவிட்டார் என மலேசியப் பிரதமர் நஜிப் ரஸாக் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து, அவர் பதவி விலக வேண்டும் என முன்னாள் பிரதமரும் , எதிர்க்கட்சித் தலைவருமான மஹதிர் முஹமது வலியுறுத்தி வருகிறார்.

இந்த நிலையில், தொலைக்காட்சி ஒன்றில் நேற்று உரையாற்றும் போதே, பிரதமர் நஜிப் ரஸாக் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார். ""இன்னும் 60 நாட்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட வேண்டும். எனது தலைமையிலான கூட்டணி அரசை மக்கள் மீண்டும் தேர்ந்தெடுத்தால் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் உலகின் மிகச்சிறந்த 20 நாடுகளின் பட்டியலில் மலேசியாவை இடம்பெற வைப்போம்" என்று அவர் தெரிவித்தார். (ஆ)

# நடிகர் சல்மான்கான் பிணையில் விடுதலை

மான்வேட்டை வழக்கில் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற சல்மான்கானுக்கு ஜோத்பூர் நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியது.

அரிய வகை மான்களை வேட்டையாடிய குற்றச்சாட்டில் நடிகர் சல்மான்கான் உட்பட 5 பேர் மீது ஜோத்பூர் முதன்மை நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. கடந்த 20 ஆண்டுகளாக நடந்து வந்த இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பு அளிக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து சல்மான்கான் ஜோத்பூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அதன்பின்னர் அவருக்குப் பிணை கேட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம், பிணை மனு மீதான விசாரணை மற்றும் உத்தரவை ஒத்திவைத்து உத்தரவிட்டது. இதனை அடுத்தே, நேற்று அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது. (ஆ)

# ஆபாசப்பட நடிகைக்கு பணம் வழங்கவில்லை!

## ட்ரம்ப் மறுப்பு



வொஷிங்டன்,ஏப்.08

ஆபாசப்பட நடிகைக்கு என் வழக்கறிஞர் பணம் கொடுத்தற்கும் எனக்கும் தொடர்பில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பைச் சுற்றி அடிக்கடி பல்வேறு சர்ச்சைக் கருத்துகள் எழும்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டார்மி டேனியல் என்ற ஆபாசப் பட நடிகை, செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த செவ்வியில், கடந்த 2006 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தன்னுடன் காதலில் இருந்ததாகவும், இருவரும் பலமுறை உறவு வைத்துள்ளோம் எனவும் கூறியிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதி மீதான இந்தக் குற்றச்சாட்டுக்கு வெள்ளை மாளிகை மறுப்புத் தெரிவித்திருந்தது. ஆனாலும், இது குறித்துப் பேசுவதை ஸ்டார்மி நிறுத்தவில்லை.

இந்த நிலையில், ட்ரம்புடன் உள்ள உறவு தொடர்பில் வெளியில் ஏதும் கூறக்கூடாது. அமைதியாக இருக்க வேண்டும் என ஒருவர் லொஸ் வேகாசில் வைத்து தன்னை மிரட்டியதாகவும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக 2016 ஆம் ஆண்டு இதைப் பற்றி பேசாமல் இருக்க ஒரு லட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலரை ட்ரம்பின் சட்டத்தரணி வழங்கியதாகவும் நடிகை ஸ்டார்மி மீண்டும் கூறியிருந்தார்.

இந்த நிலையில், தற்போது இந்த விவகாரம் தொடர்பாக முதன்முதலில் ட்ரம்ப் வாய் திறந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# இஸ்ரேல் தாக்குதல்: 7 பலஸ்தீனர்கள் பலி!

இஸ்ரேல் அரசுக்கு எதிராக, அந்தநாட்டு எல்லையில் ஹமாஸ் அமைப்பினரால் தொடர்ந்தும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினமும் ஏராளமானோர் அந்தப் பகுதியில் திரண்டு இஸ்ரேல் அரசுக்கு எதிராகப் பேரணியில் ஈடுபட்டனர். அவர்களை இஸ்ரேல் படையினர் தடுக்க முயற்சித்தனர். ஆனால் , அவர்களைத் தடுக்கும் முயற்சி தோல்வி அடைந்தது. இதனால், இஸ்ரேல் படையினர் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

மேலும் பலஸ்தீனர்களின் வசிப்பிடங்களை நோக்கி குண்டு வீசியும் தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தாக்குதலில் 7 பலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இவர்களையும் சேர்த்து கடந்த ஒரு வாரத்தில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 23 பேர் போராட்டக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பிராவோ விஸ்வரூபம் வென்றது சென்னை

மும்பை, ஏப்.08

பிராவோவின் அதிரடியான போராட்டத்தால், தோல்வியை நெருங்கிய பின் மீண்டெழுந்து, நடப்புச் சம்பியனான மும்பையை வீழ்த்தியது சென்னை.

ஐ.பி.எல் தொடரின் 11 ஆவது பருவத்தின் முதல் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்றிரவு 8 மணிக்கு தொடங்கியது. முதல் போட்டியில் நடப்புச் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணி, இரண்டு ஆண்டு தடைகளுக்கு பின் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் மோதியது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவர் டோனி பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.



இதையடுத்து மும்பை அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக கப்டன் ரோகித் சர்மாவும், எவின் லெவிசும் களமிறங்கினர். லெவிஸ் ஓட்டமெதும் ஏதும் எடுக்காத நிலையில் தீபக் சஹார் பந்தில் 'டக் அவுட்' ஆனார். அதன்பின் இஷான் கிஷான் களமிறங்கினார். அவர் நிதானமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தார்.

ரோகித் சர்மா 15 ஓட்டங்களை எடுத்து நிலையில், வட்சனின் பந்தில் அம்பதி ராயுடுவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத்தொடர்ந்து களமிறங்கிய சூர்யகுமார் யாதவ், இஷான் உடன் இணைந்து ஓட்டங்களைக் குவித்தார். சூர்யகுமார் யாதவ் 29 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் வட்சன் பந்தில் ஆட்டமிழந்தார்.

அதைத்தொடர்ந்து இஷான் கிஷானும் 29 பந்தில் 40 ஓட்டங்கள் எடுத்து தாஹிர் பந்தில் ஆட்டமிழந்தார். அதன் பின் ஹர்திக் பாண்டியா - குருணல் பாண்டியா ஜோடி சேர்ந்தனர். இருவரும் அதிரடியாக விளையாடினர்.

20 ஓவர்கள் முடிவில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்கள் எடுத்தது. ஹர்திக் பாண்டியா 21 ஓட்டங்களுடனும், குருணல் பாண்டியா 41 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். சென்னை அணியின் பந்துவீச்சில் வட்சன் இரண்டு விக்கெட்களும், இம்ரான் தாஹிர், தீபக் சஹார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 166 ஓட்டங்கள் எனும் இலக்குடன் களமிறங்கிய சென்னை அணிக்கு வட்சனும், அம்பதி ராயுடுவும் சுமாரான தொடக்கத்தை ஏற்படுத்தினர். ஆனால் ஹர்திக் பாண்டியாவின் பந்துவீச்சுக்கு 16 ஓட்டங்கள் எடுத்த வட்சன் வீழ்ந்தார். அதன் பின் வந்த ரெய்னாவும் நிலைக்கவில்லை. அவரும் ஹர்திக் பாண்டியாவின் பந்துவீச்சில் 4 ஓட்டங்களோடு நடையைக் கட்டினார். இந்த நிலையில் ஐ.பி.எல் தொடரில் அறிமுக வீரரான மயங் மார்க்கண்டே தன் சுழல் ஜாலத்தைக் காட்ட சென்னையின் விக்கெட்டுகள் தகர்ந்தன. அம்பதி ராயுடு 22 ஓட்டங்களுடனும், டோனி 5 ஓட்டங்களுடனும், சாஹர் ஓட்டமெதும் எடுக்காத நிலையிலும் மயங் மார்க்கண்டேயின் பந்தில் சரிந்தனர். கேதர் யாதவ் தசைப்பிடிப்பால் 14 ஓட்டங்கள் எடுத்தபோது, தொடர்ந்து ஆடமுடியாமல் அழைத்துச் செல்லப்பட்டார்.

எனினும் ஒருமுனையில் பிராவோ தனிநபராகப் போராடினார். 30 பந்துகளில் 68 ஓட்டங்களை எடுத்து சென்னை அணிக்கு உயிரூட்டினார் பிராவோ. இதில் 7 சிக்ஸர்களும், 3 பவுண்டரிகளும் உள்ளடக்கம். ஆயினும் 19 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் பும்ராவின் பந்தை அடிக்க முற்பட்டு பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். கடைசி ஓவரில் ஒரு விக்கெட் மாத்திரம் கைவசமிருக்க 6 பந்துகளில் 7 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

தசைப்பிடிப்பால் வெளியெறிய யாதவ் மீண்டும் களத்துக்குன் வந்தார். முதல் 3 பந்துகளையும் கோட்டைவிட்ட யாதவ், நான்காவது பந்தை சிக்ஸருக்கு அனுப்பினார். அதன் மூலம் ஓட்ட எண்ணிக்கை சமனானது. அடுத்த பந்தை பவுண்டரியாக்க சென்னை முதல் வெற்றியை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் ருசித்தது.

தனியாளாகப் போராடி சென்னையை வெற்றிக்கு அழைத்துச் சென்ற பிராவோ ஆட்ட நாயகனாகத் தெரிவானார். (அ)



## ரபாடாவுக்கு பதில் பிளங்கெட்

புதுடெல்லி, ஏப்.08

தென்னாபிரிக்கா வேகப்பந்துவீச்சாளர் காகிசோ ரபாடா காயம் காரணமாக ஐ.பி.எல் போட்டியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து, அவருக்குப் பதிலாக இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் லியாம் பிளங்கட் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார் என்று டெல்லி டேர்டெவில்ஸ் அணி தெரிவித்துள்ளது.

சமீபத்தில் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக ஜோகன்ஸ்பேர்க் நகரில் நடந்த 4 ஆவது டெஸ்ட் தொடரில் ரபாடா காயமடைந்தார்.

அவரைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள், ரபாடாவுக்கு முதுகுப் பகுதியில் பிடிப்பு இருப்பதால், 3 மாதங்கள் சிகிச்சை எடுக்கவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். இதையடுத்து, ஐ.பி.எல் போட்டியில் இருந்து விலகுவதாக ரபாடா அறிவித்தார்.

இந்நிலையில், அனுபவ வீரர் ரபாடாவுக்குப் பதிலாக யாரைத் தேர்வு செய்யலாம் என்று குழப்பத்தில் இருந்த டெல்லி டேர்டெவில்ஸ் அணி, இங்கிலாந்து வேகப்பந்துவீச்சாளர் லியான் பிளங்கட்டைத் தேர்வு செய்துள்ளது.

இது குறித்து டெல்லி டேர்டெவில்ஸ் அணி ருவிட்டரில் வெளியிட்ட அறிவிப்பில், 'காயம் காரணமாக அணியில் இருந்து விலகிக் கொண்ட ரபாடாவுக்கு பதிலாக, டெல்லி டேர்டெவில்ஸ் அணியில் இங்கிலாந்து வீரர் லியாம் பிளங்கட் சேர்க்கப்பட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். அனுபவம் வாய்ந்த பிளங்கட், சிறப்பாக செயற்படக் கூடியவர். விரைவில் அணியில் பிளங்கட் இணைவார்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொஹாலியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கிங்ஸ்லெவன் பஞ்சாப் அணியை டெல்லி டேர்டெவில்ஸ் அணி எதிர்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கு முதல் வெள்ளி

சிட்னி, ஏப்.08

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் 21 ஆவது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டியில், இலங்கை வீரர் இந்திக திசாநாயக்க முதலாவது வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

ஆண்களுக்கான 69 கிலோ எடை பிரிவில் பளுதூக்கும் போட்டியில் இவர் வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார். ஏற்கனவே இலங்கைக்கு இரண்டு வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### இன்றைய ஆட்டம்

கிங்ஸ் லெவன் பஞ்சாப்
எதிர்
டெல்லி டேர்டெவில்ஸ்
(பிற்பகல் 4 மணி)

கல்கத்தா நைட்ரைடர்ஸ்
எதிர்
றோயல் சலன்சஸ்
(இரவு 8 மணி)

## வயதான அணிதான்!

சென்னை, ஏப்.08

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் 30வயதுக்கும் அதிகமானோர் அதிகமுள்ளனர் என்று அந்த அணி மீது கேலிகள் தொடரும் நிலையில், வயது முதிர்ந்த வீரர்களை ஏலம் எடுத்துள்ளோம் என்ற பார்வை சரியானதுதான் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளெமிங் தெரிவித்துள்ளார்.

"ஏலத்தின் முதல் நாளில் வயது முதிர்ந்த வீரர்களை ஏலம் எடுத்தோம் என்ற பார்வை சரியானதுதான், ஆனால் 2 ஆம் நாளில் நிறைய இளம் வீரர்களையும் ஏலம் எடுத்தோம். நான் அனுபவத்துக்கு மதிப்புக் கொடுப்பவன். இளம் வீரர்கள் வந்தவுடனேயே தங்கள் அடையாளத்தைப் பதிவு செய்வதில்லை.

நிறையப் பேசப்படுகிறது, ஆனால் இளம் வீரர்கள் அரிதாகவே போட்டிகளை வென்று கொடுக்கின்றனர். சிலபல விதிவிலக்குகள் உண்டு, ரஷீத் கான், வோஷிங்டன் சுந்தர் என்று. ஆனால் அனுபவ வீரர்கள்தான் இதனைச் செய்கின்றனர். எனவே அனுபவத்துக்கு முன்னுரிமை அளிக்கிறோம்.



டிவைன் பிராவோ, வாட்சன், ஹர்பஜன் ஆகியோர் இன்னமும் சிறந்த போட்டியாளர்கள். டோனி இன்னமும் சிறந்த தலைவர்தான். ஆகவே நாங்கள் எடுத்துள்ள வீரர்கள் திறமை முடிந்துபோன வீரர்கள் என்று கூற முடியாது. இந்த ஆண்டு இவர்கள் சிறப்பாகத் திகழ்கிறார்கள். 2 ஆண்டுகள் தடை பற்றிய காயங்கள் எதுவும் வீரர்களிடத்தில் இல்லை.

நன்றாகவே அணியைத் தயார் செய்துள்ளோம்"

இவ்வாறு கூறினார் ஸ்டீபன் பிளெமிங். (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.